இன்றைய செய்தி நாளைய வரலாறு




# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 271 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – சித்திரை 30 – புதன்கிழமை 13 மே 2026 – சென்னை 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 271: Thiruvalluvar Year - 2057 - Chithirai 30 - Wednesday 13 May 2026 - Chennai 10 Pages ₹ 5.00




சென்னை - அண்ணா அறிவாலயத்தில், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார். உடன் முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற - நாடாளுமன்ற முன்னாள், இந்நாள் உறுப்பினர்கள், தலைமைக் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

### மிகப் பெரும் ஆளுமைகளால் பெருமை பெற்ற பொறுப்பு

## பேரவையின் மாண்புகளையும் மரபுகளையும் காத்திடுவீர்!

### சட்டப்பேரவைத் தலைவர், துணைத் தலைவரைப் பாராட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் பதிவு!

**சென்னை, மே 13 -**

**“பெரும் ஆளுமைகளால் பெருமை பெற்ற பொறுப்பு; பேரவையின் மாண்புகளையும் மரபுகளையும் காத்திடுவீர்” என்று சட்டப்பேரவை தலைவர், துணைத் தலைவர் ஆகியோரைப் பாராட்டி கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் பதிவிட்டுள்ளார்.**

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு :-



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ஜே.சி.டி. பிரபாகர் அவர்களுக்கும், பேரவைத்துணைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள ரவிசங்கர் அவர்களுக்கும் எனது வாழ்த்துகள்.

மிகப் பெரும் ஆளுமைகளால் பெருமை பெற்ற பொறுப்பில் அமர்ந்துள்ள இருவரும், அந்த மரபினையும், பேரவையின் மாண்புகளையும் காத்திட வேண்டும்.

ஆளும்கட்சியாக இருக்கும் கட்சியின் உறுப்பினர்களின் எண்ணிக்கையைவிட, சட்டமன்றத்தில் மற்ற கட்சி உறுப்பினர்களின் எண்ணிக்கைதான் அதிகம். அதுதான் இந்த முறை மக்களின் தீர்ப்பு!

அதை மதித்து, எதிர்க்கட்சிகளின் குரல் சட்டமன்றத்தில் அதிகம் ஒலிப்பதை உறுதிசெய்யும் வகையில் பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட இருவரும் அவையை வழிநடத்துவார்கள் என நம்புகிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பதிவிட்டுள்ளார்.

---

## பேரறிஞர் அண்ணா வழியில் தி.மு.க. ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்படும்!

# தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக - வளர்ச்சிக்காக இணைந்தே பயணிப்போம்!

## பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் உரை!

**சென்னை, மே 13 -**

**“பேறறிஞர் அண்ணா அவர்கள் வழியில் தி.மு.க. ஆக்கப்பூர்வமான எதிர்க்கட்சியாகச் செயல்படும்” என்றும், “தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக - வளர்ச்சிக்காக இணைந்தே பயணிப்போம்” என்றும் சட்டப் பேரவைத் தலைவர் அவர்களை வாழ்த்தி உரையாற்றுகையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.**

புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சபாநாயகர் மற்றும் துணை சபாநாயகரை வாழ்த்தி, சட்டப்பேரவையில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :-

பேரவைத் தலைவர் அவர்களே! துணைத் தலைவர் அவர்களே! முதலமைச்சர் அவர்களே!



17வது சட்டமன்றப் பேரவையின் எதிர்க்கட்சித் தலைவராக எனது முதல் உரை இது.

பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார், தமிழ்நாட்டின் தலைமகன் பேரறிஞர் அண்ணா, நவீனத் தமிழ்நாட்டின் சிற்பி முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர், இந்தியாவுக்கே வழிகாட்டிய திராவிட மாடல் ஆட்சியைத் தந்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் என எங்களுடைய தலைவர்களை எல்லாம் வணங்கி என்னுடைய இந்த உரையைத் தொடங்குகிறேன்.

**வாக்காளர்களுக்கு நன்றி!**

முதலில் என்னை இரண்டாவது முறையாகத் தேர்ந்தெடுத்து இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பிய சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி தொகுதி மக்களுக்கு என்னுடைய நன்றியை நான் இங்கே தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல எங்கள் தலைவர் தலைமையிலான திராவிட முன்னேற்றக் கழகத்தின் கூட்டணிக்கு 1 கோடியே 54 லட்சத்து 82 ஆயிரத்து 782 வாக்குகளைத் தந்த தமிழ்நாட்டு மக்களுக்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அதேபோல் எங்களுடைய கூட்டணி சட்டமன்ற உறுப்பினர்களின் வெற்றிக்காக உழைத்த திராவிட முன்னேற்றக் கழகத்தின் அனைத்து நிர்வாகிகளுக்கும், முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞரின் உயிரினும் மேலான அன்பு உடன்பிறப்புகளுக்கும், தோழமை இயக்கத் தலைவர்களுக்கும், தொண்டர்களுக்கும் என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த அவையில் என் கூட நின்று எனக்கு வழிகாட்டக்கூடிய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் கே.என்.நேரு அவர்களுக்கும், எங்களுடைய கொறடா எ.வ.வேலு அவர்களுக்கும், துணை கொறடா கோவி.செழியன், செயலாளர் தங்கம் தென்னரசு, பொருளாளர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் ஆகியோருக்கும், கழக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சட்டமன்றத்தில் நேற்று நாம் அத்தனை பேரும் பதவிப் பிரமாணம் செய்துகொண்டோம். அதன் பின்பு இன்று முதல் நடவடிக்கையாகப் பேரவைத்


**தொடர்ச்சி 3-ஆம் பக்கம்**


---

## ‘நீட்’ல Scam இல்ல, ‘நீட்’டே ஒரு Scam தான்!

### ‘நீட்’ தேர்வு ரத்தானது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் விமர்சனம்!

**சென்னை, மே 13 -**

**“நீட் தேர்வின் ஒவ்வொரு படி நிலையிலும் மோசடி நிறைந்ததாகவே ‘நீட்’ இருக்கு. நான் தொடர்ந்து சொல்லி வருவது போல் ‘நீட்’ல Scam இல்ல, ‘நீட்’டே ஒரு Scam தான்” என்று கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ‘நீட்’ தேர்வு ரத்து குறித்து தமது கருத்தினை சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.**

**இது குறித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது சமூக வலை தளத்தில் பதிவிட்டிருப்பதாவது:-**

இந்த ஆண்டும் #NEET Paper Leak முறைகேடுகள் வெளிவந்து, Exam Cancel ஆகியிருக்கு. இலட்சக்கணக்கான மாணவர்கள் மன உளைச்சலுக்கு ஆளாகியிருக்காங்க.

ஒரு தேர்வின் ஒவ்வொரு படிநிலையிலும் மோசடி நிறைந்ததாகவே நீட் இருக்கு. நான் தொடர்ந்து சொல்லி




வருவதுபோல, நீட்ல Scam இல்ல, நீட்டே ஒரு Scamதான்!

ஆண்டுதோறும் மாணவர்களின் வாழ்க்கையோடும், மாநில மருத்துவக் கட்டமைப்பின் எதிர்காலத்தோடும், மக்களின் உயிரோடும் விளையாடும் நீட் தேர்வுமுறை ஒழிக்கப்படணும்.

மீண்டும் நீட் தேர்வு நடத்துனா ஏற்படும் Delay, மாணவர்களின் உயர் கல்விக் கனவில் குழப்பங்களைத் தான் ஏற்படுத்தும். அதனால, பழைய படி Plus Two தேர்வு மதிப்பெண்களின் அடிப்படையிலேயே MBBS இடங்கள் ஒதுக்கப்படணும்.

**புதிய அரசும் ‘நீட்’ தேர்வு எதிரானது என அறிவிக்க வேண்டும்!**

தமிழ்நாட்டில் புதிதாக அமைந்திருக்கும் அரசும் நீட் தேர்வுக்கு எதிரான தனது உறுதியான நிலைப்பாட்டை அறிவிக்கணும். நீட் தேர்வில் இருந்து தமிழ்நாட்டுக்கு விலக்கு கோரும் எங்க திராவிட மாடல் அரசின் சட்ட நடவடிக்கைகளை, புதிய அரசும் கையிலெடுத்து, நம் முயற்சியில் வெற்றி பெற வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

---

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்!

### பொதுச் செயலாளர் துரைமுருகன் அறிவிப்பு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் "தி.மு.க. மாவட்டக் கழகச் செயலாளர்கள் கூட்டம்" நாளை (14-05-2026 - வியாழக்கிழமை) காலை 10.30 மணி அளவில் சென்னை, அண்ணா அறிவாலயம் "கலைஞர் அரங்கில்" நடைபெறும்.



அதுபோது மாவட்டக் கழகச் செயலாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 600 018
நாள்- 12-05-2026

**துரைமுருகன்,**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.